5-173

**உள்நாட்டலுவல்கள் இராஜாங்க அமைச்சு**

கிராம அலுவலர் III ஆந் தரத்துக்கு இணைத்துக் கொள்வதற்கான போட்டிப் பரீட்சை - 2020(2021)

நாடு பூராகவும் உள்ள பிரதேச செயலகங்களில் வெற்றிடமாகக் காணப்படும் கிராம அலுவலர் பிரிவுகளுக்கு கிராம அலுவலர்களை நியமிப்பதற்காக தகுதியுடையவர்களை தேர்ந்தெடுக்கும் வகையில் நடாத்தப்படும் எழுத்துப் பரீட்சையில் தோற்றுவதற்கு கீழே குறிப்பிடப்பட்டுள்ள தகைமையுடைய பெண்/ ஆண் ஆகிய இரு பாலாரிடமிருந்தும் விண்ணப்பங்கள் கோரப்படுகின்றது. அத்தோடு அப்பரீட்சை, பரீட்சை ஆணையாளர் நாயகத்தினால் 2021, செத்தெம்பர் மாதம் நடாத்தப்படும் என்பதையும் இத்தால் அறியப்படுத்தப்படுகின்றது.

02. விண்ணப்பதாரி கீழ்வரும் 06 ஆம் பிரிவில் குறிப்பிடப்பட்டுள்ள ஏற்பாடுகளின் பிரகாரம் தகைமை பெறும் பிரதேச செயலகப் பிரிவுகளில் நிலவுகின்ற வெற்றிடங்களுக்காக விண்ணப்பிக்க முடியும்.

03. பிரதேச செயலகப் பிரிவு மற்றும் குறித்த மாவட்டம் மற்றும் உரிய மாகாணம் தொடர்பான தகவல்கள் I ஆம் அட்டவணையில் தரப்பட்டுள்ளது. விண்ணப்பதாரிகள் தாம் கோரும் பிரதேச செயலகப் பிரிவு மற்றும் அதன் இலக்கம், மாவட்டத்தின் பெயர் மற்றும் இலக்கம், மாகாணத்தின் பெயர் மற்றும் இலக்கம் என்பன அவ்வட்டவணையில் குறிப்பிடப்பட்டுள்ளவாறு நிவர்த்தியாக விண்ணப்பப்படிவத்தின் உரிய இடத்தில் குறிப்பிடுதல் வேண்டும். அதில் பிற்பட்ட காலங்களில் மாற்றங்களைச் செய்வதற்கு இடமளிக்கப்பட மாட்டாது. அவ்விபரங்களைப் பிழையாக குறிப்பிடுவதன் மூலம் விண்ணப்பதாரிக்கு ஏற்படும் ஏதேனும் பிரதிகூலங்கள் தொடர்பில் எவ்வித கோரிக்கைகளும் கவனத்திற் கொள்ளப்பட மாட்டாது என்பதுடன் பிரதேச செயலகப் பிரிவு மற்றும் பிரிவின் இலக்கத்தைக் குறிப்பிடப்படாத விண்ணப்பங்கள் நிராகரிக்கப்படும்.

04. போட்டிப் பரீட்சை தொடர்பான விபரங்கள் :

4.1 பரீட்சை மொழி மூலம் - இப்பரீட்சை சிங்களம், தமிழ், ஆங்கிலம் ஆகிய மொழி மூலங்களில் I ஆம் அட்டவணையில் குறிப்பிடப்பட்டுள்ள மாவட்டத்தில் நடைபெறும். எனினும் பரீட்சை நிலையமொன்றை அமைப்பதற்காக போதுமானளவு விண்ணப்பதாரிகளைக் கொண்ட எண்ணிக்கையினர் விண்ணப்பிக்காத மாவட்டங்களில், விண்ணப்பதாரிகளுக்கு கிட்டிய வேறு மாவட்டமொன்றில் உள்ள பரீட்சை நிலையத்தில் தோற்றவேண்டி ஏற்படும். பரீட்சார்த்திகள் மொழி மூலம் ஒன்றில் மாத்திரம் தோற்றுதல் வேண்டும். கோரும் மொழி ஊடகம் பின்னர் மாற்றுவதற்கு இடமளிக்கப்பட மாட்டாது.

4.2 கிராம அலுவலர்களை ஆட்சேர்ப்பு செய்வதற்கான பரீட்சை, பின்வரும் இரண்டு (02) வினாப் பத்திரங்களைக் கொண்டுள்ளது.

| பாடம் | புள்ளி எண்ணிக்கை | சித்தியெய்வதற்கு எடுக்கப்பட வேண்டிய குறைந்தபட்ச புள்ளிகளின் எண்ணிக்கை | காலம் |
|---|---|---|---|
| 01. மொழித் திறன் | 100 | 40 | 1 1/2 மணித்தியாலம் |
| 02. பொது அறிவு மற்றும் உளச்சார்பு | 100 | 40 | 1 1/2 மணித்தியாலம் |

4.3 எழுத்துப் பரீட்சைக்கான பாடத்திட்டம் :

4.3.1 மொழித் திறன்:

இவ்வினாப்பத்திரம் பரீட்சார்த்தியின் கருத்து வெளிப்பாடு, புரிந்துகொள்ளல், எழுத்துப்பிழை, மொழி மற்றும் கட்டுரை, கொடுக்கப்பட்ட கடிதத்தை வரைவு செய்தல், கொடுக்கப்பட்ட உரையை சுருக்கமாகக் கூறுதல், கொடுக்கப்பட்ட வாக்கியத்தின் கருத்தை ஒரே வாக்கியத்தில் எழுதுதல் மற்றும் எளிய இலக்கணத்தைப் பயன்படுத்துதல் போன்ற அறிவை பரீட்சித்துப்பார்க்கும் விடயம் சார்ந்த வினாக்களைக் கொண்டமைந்திருக்கும். சகல வினாக்களுக்கும் விடையளித்தல் வேண்டும்.

4.3.2 பொது அறிவு மற்றும் உளச்சார்பு :

இவ்வினாப் பத்திரத்தின் ஊடாக உள்நாட்டு மற்றும் வெளிநாட்டு முக்கியத்துவம் வாய்ந்த வரலாற்று, புவியியல், சமூக மற்றும் பொருளாதார தகவல்கள் மற்றும் உள்ளூர் மற்றும் வெளிநாட்டு சமகால தகவல்கள் தொடர்பான பொது அறிவு மற்றும் புள்ளிவிவர திறன்கள், பகுத்தறிவு திறன், சிக்கல்களைத் தீர்க்கும் மற்றும் முடிவெடுக்கும் திறன் உள்ளிட்ட பொது அறிவை அளவிடும் பல்தேர்வு மற்றும் சுருக்கமாக பதிலளிக்கும் மாதிரியைக் கொண்ட வினாக்களை உள்ளடக்கிக் காணப்படுகின்றது. சகல வினாக்களுக்கும் விடையளித்தல் வேண்டும்.

4.4 எழுத்துப் பரீட்சையில் அதிகூடிய புள்ளிகளைப் பெறும் ஒழுங்கிற்கு ஏற்ப விண்ணப்பதாரிகளுக்கு முன்னுரிமை வழங்கி ஒரு பாடத்தில் 40% அல்லது அதற்கு மேற்பட்ட புள்ளிகளைப் பெற்றுள்ள விண்ணப்பதாரிகள் மாத்திரம் கவனத்திற் கொள்ளப்படுவார்கள்.

05. ஆட்சேர்ப்பு முறை :

(i) எழுத்துப் பரீட்சையில் ஒவ்வொரு பிரதேச செயலகப் பிரிவு மட்டத்திலும் அதிகூடிய புள்ளிகளைப் பெற்றுள்ள விண்ணப்பதாரிகளில் ஒவ்வொரு பிரதேச செயலகப் பிரிவினதும் வெற்றிட எண்ணிக்கையைப் போன்று இருமடங்கு விண்ணப்பதாரி எண்ணிக்கையினர் கட்டமைக்கப்பட்ட நேர்முகப் பரீட்சைக்கு அழைக்கப்படுவார்கள். எழுத்துப் பரீட்சை மற்றும் கட்டமைக்கப்பட்ட நேர்முகப் பரீட்சையில் பெற்றுக்கொள்ளும் மொத்த புள்ளிகளைக் கொண்ட தகுதியான விண்ணப்பதாரிகள் அப்பிரதேச செயலகப் பிரிவின் வெற்றிட எண்ணிக்கையை நிரப்புவதற்காக பயிற்சி பாடநெறிக்கு தேர்ந்தெடுக்கப்படுவார்கள்.

இதன்கீழ் பின்வரும் விதிவிலக்குகள் உள்ளடங்கும்.

(அ) ஒரு பிரதேச செயலகப் பிரிவில் காணப்படுகின்ற வெற்றிடங்களின் அளவை முழுமைப்படுத்துவதற்காக போதுமானளவு விண்ணப்பதாரிகளின் எண்ணிக்கை அப்பிரதேச செயலகப் பிரிவில் தகுதியில்லாத போது அப்பிரதேச செயலகப் பிரிவு அமைந்துள்ள மாவட்டத்தில் பரீட்சையில் சித்தியெய்திய விண்ணப்பதாரிகள் மாவட்ட ரீதியில் திறன் ஒழுங்கிற்கு ஏற்ப எஞ்சிய வெற்றிட எண்ணிக்கைகள் நிரப்பப்படும். (இதன் கீழ் இணைத்துக் கொள்வதற்காக வர்த்தமானி அறிவித்தலின் 6.1 இன் கீழ் குறிப்பிடப்பட்டுள்ள தகைமைகள் "பிரதேச செயலகப் பிரிவில்" என்று "மாவட்டத்தினுள்" எனவும் கருதப்படும்.)

(ஆ) மேற்படி (அ) இற்கமைய மாவட்டமொன்றில் காணப்படும் வெற்றிடங்களின் அளவை பூர்த்தி செய்வதற்கு போதுமானளவு விண்ணப்பதாரிகளின் எண்ணிக்கை அம்மாவட்டத்தில் தகுதியில்லாத சந்தர்ப்பத்தில் அம்மாவட்டம் அமைந்துள்ள மாகாணத்தில் பரீட்சையில் சித்தியெய்திய விண்ணப்பதாரிகளின் திறன் ஒழுங்கிற்கு ஏற்ப எஞ்சிய வெற்றிட எண்ணிக்கைகள் நிரப்பப்படும்.

(இதன் கீழ் இணைத்துக் கொள்வதற்காக வர்த்தமானி அறிவித்தலின் 6.1 இன் கீழ் குறிப்பிடப்பட்டுள்ள தகைமைகள் "பிரதேச செயலகப் பிரிவில்" என்றும் "மாகாணத்தில்" எனவும் கருதப்படும்.)

(ii) மேலே 5(i) ஆம் பந்தியில் குறிப்பிடப்பட்டுள்ள கட்டமைக்கப்பட்ட நேர்முகப் பரீட்சைக்காக பின்வரும் வகையில் புள்ளிகள் வழங்கப்படும்.

(அ)

| புள்ளிகள் வழங்கப்படும் தலைப்புக்கள் | அதிகபட்ச புள்ளி அளவு |
|---|---|
| தலைமைத்துவம் | 15 |
| விளையாட்டுத் திறன் | 05 |
| மொழித் தேர்ச்சி ( தாய் மொழி தவிர்ந்த ஏனைய மொழித் தேர்ச்சிகள்) | 10 |
| கணினி அறிவு | 15 |
| நேர்முகப் பரீட்சையில் காட்டும் திறன்கள் | 05 |
| மொத்தம் | 50 |

(ஆ) புள்ளி வழங்கும் போது அரச நிறுவனம் / திணைக்களமொன்றினால் முறைசார்ந்த வகையில் வழங்கப்பட்ட சான்றிதழ்கள் மற்றும் உரிய விடயங்களை உறுதிப்படுத்துவது தொடர்பிலான பொறுப்பு ஒப்படைக்கப்பட்டுள்ள அரச திணைக்களங்கள், நிறுவனங்களின் பதவிநிலை மட்ட உத்தியோகத்தர்களினால் வழங்கப்பட்டுள்ள உறுதிப்படுத்தும் கடிதங்கள் மாத்திரமே கவனத்திற் கொள்ளப்படும். உதாரணமாக அறநெறிப் பாடசாலையின் ஆசிரியாக இருத்தல், கிராம அபிவிருத்தி சங்கத்தில் பதவி வகித்தல், விளையாட்டுக் கழகத்தில் பதவி வகித்தல் போன்ற விடயங்கள் பிரதேச செயலாளரினால் உறுதிப்படுத்தப்படல் வேண்டும்.

(இ) கிராம அலுவலர்களுக்கு அரசியல் உரிமைகள் இல்லை என்பதால், அரசியல் மட்ட அமைப்புக்களில் பதவி வகித்தல் தொடர்பில் புள்ளிகள் வழங்கப்பட மாட்டாது. பிரதேச சபை / நகர சபை உறுப்பினர்கள், கூட்டுறவு சங்கங்களின் பணிப்பாளர் குழு உறுப்பினர்கள் போன்ற அரசியல் கட்சிகளை பிரதிநிதித்துவப்படுத்துவதினால் பெறக்கூடிய பதவிகளையும் இதற்கு உதாரணமாகக் குறிப்பிட முடியும்.

(iii) மூன்று மாதங்களைக் கொண்ட இப்பயிற்சிப் பாடநெறி மாவட்டச் செயலாளரின் மேற்பார்வையில் நடாத்தப்படுகின்றது. அப்பயிற்சிப் பாடநெறியை வெற்றிகரமாக நிறைவு செய்துள்ளதாக மாவட்டச் செயலாளரினால் பரிந்துரைக்கப்படுபவர்கள் என்னால் கிராம அலுவலர் III ஆந் தரத்துக்கு நியமிக்கப்படுவார்கள். பயிற்சிக் காலத்தில் 3000.00 ரூபாய்க் கொடுப்பனவு மாத்திரம் வழங்கப்படுவதோடு அக்காலத்தினுள் விடுமுறை பெறும் உரிமை காணப்படுவதில்லை. பாடநெறி நடாத்தப்படும் நாட்களில் குறைந்த பட்சம் 80% வரவு இருத்தல் வேண்டும். பயிற்சித் திட்டத்தின் கீழ் நடாத்தப்படும் எழுத்து மூலப் பரீட்சையில் சித்தியெய்வதற்காக 50% ஆன அளவு புள்ளியைப் பெறல் வேண்டும். பயிற்சிக் காலம் சேவைக் காலத்துடன் சேர்க்கப்பட மாட்டாது என்பதுடன் அக்காலம் ஓய்வூதியப் பிரமாண ஏற்பாடுகளின் கீழ் ஓய்வூதியத்துடன் மாத்திரம் சேர்த்துக் கொள்ளப்படுகின்றது.

(iv) வெற்றிடமொன்று அல்லது பல வெற்றிடங்களுக்காக ஒரே சம அளவில் புள்ளிகளைப் பெற்றுக்கொண்ட விண்ணப்பதாரிகள் ஒன்றுக்கு மேற்பட்டவர்கள் காணப்படும் சந்தர்ப்பத்தில் அவ்வெற்றிடம் அல்லது பல வெற்றிடங்களை அல்லது நிரப்புவது தொடர்பில் என்னால் முடிவெடுக்கப்படும்.

06. விண்ணப்பதாரியின் கல்வித் தகைமைகள்.- பரீட்சார்த்திகள் குறைந்தபட்சம் கீழே காட்டப்பட்டுள்ள தகைமைகளை விண்ணப்பங்கள் ஏற்றுக்கொள்ளப்படும் இறுதித் திகதிக்கு அல்லது அதற்கு முன்னர் பூர்த்தி செய்திருத்தல் வேண்டும்.

6.1 விண்ணப்பங்கள் ஏற்றுக்கொள்ளப்படும் இறுதித்திகதிக்கு உடன்முன்னரான ஆறு (06) வருட காலத்தினுள் பரீட்சார்த்தி தான் பதவியை ஏற்பதற்கு எதிர்பார்க்கும் பிரதேச செயலகப் பிரிவினுள் குறைந்தபட்சம் மூன்று (03) வருடங்கள் தொடர்ச்சியாக நிரந்தர குடியிருப்பாளராக இருத்தல் வேண்டும். அதனை பின்வரும் சான்றிதழ் ஒன்றின் மூலம் உறுதிப்படுத்தல் வேண்டும்.

1. வாக்காளர் பெயர்ப் பட்டியல்

2. கிராம அலுவலரினால் வழங்கப்பட்ட வதிவிடச் சான்றிதழ்

6.2 வயதெல்லை - விண்ணப்பதாரி விண்ணப்பங்கள் ஏற்றுக்கொள்ளப்படும் இறுதித் திகதிக்கு 21 வயதுக்கு குறையாமலும் 35வயதினை விட மேற்படாதிருத்தலும் வேண்டும்.( அதற்கமைய 2000.06.28ஆந் திகதிக்கு அல்லது அதற்கு முன்னர் மற்றும் 1986.06.28ஆந் திகதிக்கு அல்லது அதன் பின்னர் பிறந்த திகதி காணப்படுபவர்களுக்கு மாத்திரம் இதற்காக விண்ணப்பிப்பதற்கு தகைமை காணப்படுகின்றது.)

6.3 கல்வித் தகைமைகள் - விண்ணப்பதாரிகளுக்கு கீழ்வரும் வகையில் குறிப்பிடப்படடுள்ள கல்வித் தகைமைகள் இருத்தல் வேண்டும்.

(அ) முதன் மொழியாக சிங்களம் அல்லது தமிழ் மொழிகளில் ஏதாவதொரு மொழியிலான பாடம் மற்றும் கணிதம் உள்ளிட்ட குறைந்தபட்சம் நான்கு (04) பாடங்களில் திறமைச் சித்தியுடன் ஆறு (06) பாடங்களில் ஒரே தடவையில் கல்விப் பொதுத் தராதரப் பத்திர ( சாதாரண தரம்) பரீட்சையில் சித்தியடைந்திருத்தல்

மற்றும்

(ஆ) கல்விப் பொதுத் தராதரப் பத்திர (உயர் தரப்) பரீட்சையில் சகல பாடங்களிலும் ( பொது அறிவுப் பரீட்சை மற்றும் பொது ஆங்கிலம் தவிர்ந்த) ஒரே தடவையில் சித்தியடைந்திருத்தல் வேண்டும். பழைய பாடத்திட்டத்தின் கீழ் (03) பாடங்களில் சித்தியடைந்திருத்தல் போதுமானதாகும்.

6.4 பரீட்சார்த்திகள்-

1. பிறப்பால் அல்லது பதிவினால் இலங்கைப் பிரசையாக இருத்தல் வேண்டும்.

2. குற்றவியல் செயற்பாடு தொடர்பாக நீதிமன்றத்தில் குற்றவாளியாக தண்டனை பெற்றிருக்காதிருத்தல் வேண்டும் அத்தோடு, மிகச் சிறந்த நடத்தை உடையவராகவும் இருத்தல் வேண்டும்.

3. அரச அல்லது அரச கூட்டுத்தாபனம் அல்லது அரச நியதிச் சட்ட நிறுவனமொன்றிலிருந்து பதவி நீக்கம் செய்யப்பட்டவர், சேவையை விட்டு விலகியவர் அல்லது வினைத்திறனின்மை காரணமாக ஓய்வு பெறச் செய்யப்பட்டவராக இருத்தல் கூடாது.

4. வகையற்ற நிலைக்கு உட்பட்டுள்ளவராக இல்லாதிருத்தல் வேண்டும்.

5. ஏதேனும் ஒரு மதத்தின் அல்லது சமயப் பிரிவின் மதகுருவாக இருத்தல் கூடாது.

07. பதவிக்கு உரித்தான மாதாந்த சம்பள முறை :-

சம்பள அளவுத்திட்டம் - ரூபா 28,940.00 -10×300-11 × 350-10 × 560-10 × 660-ரூபா. 47,990.00.

(இலக்கம் 03/2016 மற்றும் 2016.02.25 ஆந் திகதிய அரசாங்க நிர்வாக சுற்றறிக்கை அட்டவணை (ஐ)இன் ஏற்பாடுகளின் படி கொடுப்பனவுகள் மேற்கொள்ளப்படும்.)

08. சேவை நிபந்தனைகள் :

8.1 ஆட்சேர்ப்பு நடைபெறுவது கிராம அலுவலர் சேவையின் தரம் III இற்காகும்.

8.2 இந்நியமனம் நிரந்தரமானதும் ஓய்வூதிய உரித்துடையதுமாகும். உமக்குரித்தான ஓய்வூதியத் திட்டமானது அரசாங்கத்தினால் தொடர்ந்தேர்ச்சையாக எடுக்கப்படும் கொள்கைசார் தீர்மானங்களுக்கு உட்பட்டதாகும். விதவைகள் அநாதைகள் / தபுதாரர்கள் அநாதைகள் அலுவல நிதியத்திற்கு பங்களிப்புச் செய்தல் வேண்டும். மூன்று மாத (03) பயிற்சிக் காலம் கிராம உத்தியோகத்தர் சேவைக் காலத்துடன் கணக்கிடப்படுவதில்லை.

8.3 முதல் நியமனத் திகதி முதல் மூன்று வருடங்களுக்கு நியமிக்கப்படும் பிரதேச செயலகப் பிரிவினுள் கட்டாயம் சேவையாற்றல் வேண்டும்.

8.4 கிழமையில் ஒரு நாள் விடுமுறை தினமாக வழங்கப்படும். அத்தினம் தவிர்ந்த ஏனைய வார நாட்களில் 24 மணித்தியாலங்களும் கடமையாற்றுவதற்கு நியமிக்கப்படும் கிராம அலுவலர் பிரிவினுள் தங்களது கடமையைச் செய்வதற்கு கட்டுப்பட்டுள்ளார்.

8.5 இப்பதவிக்கு நியமிக்கப்பட்ட ஒருவர் அங்கீகரிக்கப்பட்ட ஆட்சேர்ப்பு நடைமுறை, அரச சேவை ஆணைக்குழுவின் ஒழுங்கு விதி, தாபன விதிக்கோவை மற்றும் நிதிப் பிரமாணங்களில் குறிப்பிடப்பட்டுள்ள ஏற்பாடுகளுக்கும் நிபந்தனைகளுக்கும் அரசினால் விதிக்கப்பட்டுள்ள மற்றும் எதிர்வரும் காலங்களில் விதிக்கப்படும் நிபந்தனை களுக்கும் ஏற்பாடுகளுக்கும் உட்பட்டவராவார்.

09. விண்ணப்பங்கள் அனுப்ப வேண்டிய முறை :

9.1 இவ்வறிவித்தலின் இறுதியில் உள்ள மாதிரிப் படிவத்திற்கமைய தயாரிக்கப்பட்ட விண்ணப்பத்தினை 2021.06.28ஆந் திகதிக்கு அல்லது அதற்கு முன்னர் "பரீட்சை ஆணையாளர் நாயகம், நிறுவன மற்றும் வெளிநாட்டு பரீட்சைக் கிளை, இலங்கை பரீட்சைத் திணைக்களம், தபால் பெட்டி - 1503, கொழும்பு" என்ற முகவரிக்கு பதிவுத் தபாலில் அனுப்புதல் வேண்டும். விண்ணப்பப்படிவத்தை இட்டு அனுப்பும் கடித உறையின் இடது பக்க மேல் மூலையில் "கிராம உத்தியோகத்தர் III ஆந் தரத்துக்கு ஆட்சேர்ப்புச் செய்வதற்கான போட்டிப் பரீட்சை 2020(2021)" என்று குறிப்பிடுதல் வேண்டும்.

9.2 விண்ணப்பப்படிவம், மாதிரி விண்ணப்பப்படிவத்துக்கு ஏற்ப ஏ-4 அளவுடைய கடதாசியின் இரு பக்கங்களையும் பயன்படுத்தி தலைப்பிலக்கம் 10 வரை முதல் பக்கத்திலும் எஞ்சியதை மற்றைய பக்கங்களில் வரும் வகையில் அச்சிட்டு அல்லது தட்டச்சு செய்து விண்ணப்பதாரியின் கையெழுத்தில் நிரப்புதல் வேண்டும். விண்ணப்பங்களை தயாரிக்கும் போது அதன் தலைப்பில் குறிப்பிடப்பட்டுள்ள பரீட்சையின் பெயர் சிங்கள விண்ணப்பப்படிவங்களில் சிங்களத்துக்கு மேலதிகமாக ஆங்கிலத்திலும், தமிழ் விண்ணப்பங்களில் தமிழ் மொழிக்கு மேலதிகமாக ஆங்கிலத்திலும் குறிப்பிடுதல் வேண்டும்.

9.3 விண்ணப்பப்படிவத்திலும் பரீட்சைக்கான அனுமதி அட்டையிலும் பரீட்சார்த்தியின் கையொப்பம் உறுதிப்படுத்தப்பட்டிருத்தல் வேண்டும். ஏதாவதொரு நிறுவனத்திலிருந்து பரீட்சைக்கு விண்ணப்பிக்கும் ஒரு விண்ணப்பதாரர் தமது கையொப்பத்தை நிறுவனத் தலைவர் அல்லது அவரால் அதிகாரமளிக்கப்பட்ட அதிகாரியால், இல்லையெனில் விண்ணப்பதாரர் தமது கையொப்பத்தை அரச பாடசாலையொன்றின் அதிபர், பிரிவின் கிராம அலுவலர், சமாதான நீதவான், சத்தியப் பிரமாண ஆணையாளர், வழக்கறிஞர், பிரசித்தி பெற்ற நொத்தாரிசு,முப்படையின் அதிகாரமிக்க அதிகாரி, அரச அல்லது மாகாண அரசாங்க சேவையில் அல்லது நிரந்தர பதவிநிலை தரத்துடைய உத்தியோகத்தர் மூலம் சான்றுப்படுத்தப்பட்டிருத்தல் வேண்டும்.

9.4 தற்போது அரசாங்க சேவையில் அல்லது மாகாண அரசாங்க சேவையில் ஈடுபட்டுள்ள விண்ணப்பதாரிகள் தமது விண்ணப்பங்களை தங்களது திணைக்களத் தலைவரின் ஊடாக அனுப்பி வைத்தல் வேண்டும்.

9.5 பரீட்சைக் கட்டணமாக 600.00 ரூபாய் அறவிடப்படும். விண்ணப்பதாரியின் பெயரில் இப்பரீட்சைக்குரியதாக மாத்திரம் அத்தொகையை ஏதேனுமொரு தபாலகத்தில்/ உபதபாலகத்தில், பரீட்சை ஆணையாளர் நாயகத்தின் வருமானத் தலைப்பு இலக்கம் 20-03-02-13 இல் வரவு வைத்து கிடைக்கப்பெற்ற பற்றுச்சீட்டை பரீட்சைக்கான விண்ணப்பத்துடன் இணைக்கப்பட்டிருத்தல் வேண்டும். (பற்றுச்சீட்டு இலக்கம், திகதி மற்றும் தபாலகம் என்பனவற்றை தெளிவாக குறிப்பிடுதல் வேண்டும்.) செலுத்தப்பட்ட பரீட்சைக் கட்டணம் எந்தவொரு காரணத்திற்காகவும் மீள வழங்கப்பட மாட்டாது என்பதுடன், இப்பரீட்சைக் கட்டணம் மற்றொரு பரீட்சைக்கு மாற்றவும் இடமளிக்கப்பட மாட்டாது. (அப்பற்றுச்சீட்டின் நிழற்படப் பிரதியை தம் வசம் வைத்துக் கொள்வது பிரயோசனப்படும்.)

9.6 பூரணமற்றதும் ஒழுங்கற்றதுமான விண்ணப்பப்படிவங்கள் எவ்வித அறிவித்தலுமின்றி நிராகரிக்கப்படும். உதாரணமாக 9.2 ஆம் பந்தியில் குறிப்பிடப்பட்டுள்ளவாறு அதற்கேற்ப விண்ணப்பப்படிவத்தை தயாரிக்காமை, வாசிக்க முடியாதவாறு தெளிவற்ற வகையில் விண்ணப்பங்களை பூர்த்தி செய்திருத்தல் , நியமனத்தை எதிர்பார்க்கும் பிரதேச செயலகப் பிரிவு மற்றும் இலக்கத்தை சரியாக குறிப்பிடாமை, விண்ணப்பதாரி ஒப்பமிட்டிருக்காமை, பரீட்சைக் கட்டணம் செலுத்திய பற்றுச்சீட்டை ஒட்டியிருக்காமை போன்ற விடயங்களைக் குறிப்பிட முடியும்.

10. பரீட்சைக்கு தோற்றுதல் மற்றும் பெறுபேறுகள் வெளியிடல்.

10.1 பரீட்சார்த்திகள் பரீட்சை மண்டபத்தினுள் தான் தோற்றும் சகல பாடங்களுக்கும் பரீட்சை மண்டபப் பொறுப்பாளர் திருப்தியுறும் வகையில் தனது ஆள் அடையாளத்தை நிரூபித்தல் வேண்டும். அதற்காக பின்வரும் ஆவணங்களில் ஏதேனும் ஒன்று ஏற்றுக்கொள்ளப்படும்.

I. தேசிய ஆளடையாள அட்டை

II. செல்லுபடியாகும் கடவுச் சீட்டு

III. செல்லுபடியாகும் இலங்கை சாரதி அனுமதிப் பத்திரம்

அவ்வாறே பரீட்சார்த்தியின் ஆளடையாளத்தை உறுதிப்படுத்த முடியுமான வகையில் தமது முகம் மற்றும் இரு காதுகளையும் மறைக்காது பரீட்சை மண்டபத்தினுள் பிரவேசிக்க வேண்டும். அதேபோன்று ஆளடையாளத்தை சான்றுப்படுத்துவதற்கு மறுக்கும் விண்ணப்பதாரிகள் பரீட்சை மண்பத்தினுள் நுழைவதற்கு அனுமதிக்கப்பட மாட்டார்கள். மேலும் பரீட்சை மண்டபத்தினுள் நுழைந்தது முதல் அதிலிருந்து வெளியேறும் வரை பரீட்சை அதிகாரிகளுக்கு விண்ணப்பதாரியை அடையாளம் காண முடியுமான வகையில் முகம் மற்றும் இரு காதுகளையும் மறைக்காதிருத்தல் வேண்டும்.

10.2 பரீட்சார்த்தி தமக்கு ஒதுக்கப்பட்டுள்ள பரீட்சை மண்டபத்தில் உரிய பரீட்சை சுட்டிலக்கத்தின் கீழ் பரீட்சைக்கு தோற்றுதல் வேண்டும். பரீட்சைக்கு தோற்றும் சகல பரீட்சார்த்திகளும் பரீட்சை தினத்தில் தமது கையொப்பத்தை சான்றுப்படுத்திய பரீட்சை அனுமதிப் பத்திரத்தை மண்டப் பொறுப்பாளரிடம் கையளித்தல் வேண்டும். தமது பரீட்சை அனுமதிப் பத்திரத்தை சமர்ப்பிக்காத எந்தவொரு பரீட்சார்த்தியும் பரீட்சைக்கு தோற்றுவதற்கு அனுமதி வழக்கப்பட மாட்டார்கள்.

10.3 பரீட்சை பெறுபேறுகளை வெளியிடல்

வர்த்தமானி அறிவித்தல் 4.4 பந்தியின் பிரகாரம் எழுத்துப் பரீட்சையில் தகைமை பெற்றவர்களின் பெயர்ப் பட்டியல் கட்டமைக்கப்பட்ட நேர்முகப் பரீட்சைக்காக பிரதேச செயலகப் பிரிவுகளில் நிலவுகின்ற வெற்றிட எண்ணிக்கைக்கு ஏற்ப வெவ்வேறாக செயலாளர், உள்நாட்டலுவல்கள் இராஜாங்க அமைச்சிடம் வழங்கப்படும். நேர்முகப் பரீட்சைப் புள்ளிகள் கிடைக்கப்பெற்றதன் பின்னர் நேர்முகப் பரீட்சைக்குத் தகைமை பெற்றுள்ள விண்ணப்பதாரர்களின்

எழுத்து மற்றும் நேர்முகப் பரீட்சைப் புள்ளிகளின் மொத்தப் புள்ளியின் அடிப்படையில் பிரதேச செயலகப் பிரிவு மட்டத்தில் தயார்படுத்தப்பட்ட பெறுபேற்றுப் பட்டியல் செயலாளர், உள்நாட்டலுவல்கள் இராஜாங்க அமைச்சுக்கு வழங்கப்படும்.

பின்னர், வர்த்தமானி அறிவித்தல் 05.(i) இன் (அ) மற்றும் 4.4 பந்தியின் பிரகாரம் எழுத்துப் பரீட்சையில் தகைமை பெற்றவர்களின் பெயர்ப் பட்டியல் கட்டமைக்கப்பட்ட நேர்முகப் பரீட்சைக்காக மாவட்ட மட்டத்தில் நிலவுகின்ற வெற்றிட எண்ணிக்கைக்கு ஏற்ப வெவ்வேறாக செயலாளர், உள்நாட்டலுவல்கள் மற்றும் இராஜாங்க அமைச்சிடம் வழங்கப்படும். நேர்முகப் பரீட்சையின் புள்ளிகள் கிடைக்கப்பெற்றதன் பின்னர் நேர்முகப் பரீட்சைக்குத் தகைமைபெற்றுள்ள விண்ணப்பதாரர்களின் எழுத்து மற்றும் நேர்முகப் பரீட்சைப் புள்ளிகளின் மொத்தப் புள்ளியின் அடிப்படையில் மாவட்ட மட்டத்தில் தயார்படுத்தப்பட்ட பெறுபேற்றுப் பட்டியல் செயலாளர், உள்நாட்டலுவல்கள் இராஜாங்க அமைச்சுக்கு வழங்கப்படும்.

பின்னர், வர்த்தமானி அறிவித்தல் 05.(i) இன் (ஆ) மற்றும் 4.4 பந்தியின் பிரகாரம் எழுத்துப் பரீட்சையில் தகைமை பெற்றவர்களின் பெயர்ப் பட்டியல் கட்டமைக்கப்பட்ட நேர்முகப் பரீட்சைக்காக மாகாண மட்டத்தில் நிலவுகின்ற வெற்றிட எண்ணிக்கைக்கு ஏற்ப வெவ்வேறாக செயலாளர், உள்நாட்டலுவல்கள் மற்றும் இராஜாங்க அமைச்சிடம் வழங்கப்படும். நேர்முகப் பரீட்சையின் புள்ளிகள் கிடைக்கப்பெற்றதன் பின்னர் நேர்முகப் பரீட்சைக்குத் தகைமைபெற்றுள்ள விண்ணப்பதாரர்களின் எழுத்து மற்றும் நேர்முகப் பரீட்சைப் புள்ளிகளின் மொத்தப் புள்ளியின் அடிப்படையில் மாகாண மட்டத்தில் தயார்படுத்தப்பட்ட பெறுபேற்றுப் பட்டியல் செயலாளர், உள்நாட்டலுவல்கள் இராஜாங்க அமைச்சுக்கு வழங்கப்படும்.

பரீட்சைக்குத் தோற்றிய அனைத்து பரீட்சார்த்திகளுக்கும் பெறுபேறுகள் தனிப்பட்ட வகையில் அனுப்புவதற்கு அல்லது இலங்கை பரீட்சைத் திணைக்களத்தின் www.results.exams.gov.lk இணையத்தளத்தில் பிரசுரிப்பதற்கு உள்நாட்டலுவல்கள் அமைச்சின் செயலாளரின் அறிவித்தலுக்கு ஏற்ப நடவடிக்கை எடுக்கப்படும்.

11. சகல பரீட்சார்த்திகளும் அரச வர்த்தமானி அறிவித்தலில் பிரசுரிக்கப்பட்டுள்ள பரீட்சை சட்டதிட்டங்கள் தொடர்பில் அறிந்திருத்தல் வேண்டும் என்பதோடு அவற்றைப் பின்பற்றியொழுகுவதற்கும் கட்டுப்பட்டிருத்தல் வேண்டும். பரீட்சை நடாத்துவது தொடர்பில் பரீட்சை ஆணையாளர் நாயகத்தினால் எடுக்கப்படும் சட்டதிட்டங்களுக்கும் பரீட்சார்த்திகள் கட்டுப்பட்டிருத்தல் வேண்டும். அச்சட்ட விதிகளை மீறும் பட்சத்தில் பரீட்சை ஆணையாளர் நாயகத்தினால் விதிக்கப்படும் தண்டனைக்கு உட்படுத்தப்படுவார்கள்.

12. பரீட்சார்த்தியொருவருக்கு பரீட்சை அனுமதிப்பத்திரம் வழங்கப்படுவதானது அவர் பரீட்சைக்கு தோற்றுவதற்கான தகைமை கொண்டவர் எனக் கருதப்பட மாட்டார். அத்தோடு பிழையான மற்றும் முழுமையற்ற விண்ணப்பப்படிவங்கள் சமர்ப்பிக்கப்பட்டு ஏதேனும் பிரதிகூலங்கள் ஏற்படின் அதனைப் பரீட்சார்த்தியே பொறுப்பேற்றுக் கொள்ள வேண்டும். அவ்வாறான விடயங்களுக்கு எந்தவொரு கோரிக்கைகளும் கருத்திற் கொள்ளப்பட மாட்டாது.

13. ஆட்சேர்ப்பு செய்யப்படுவது எத்தினதில் நிலவுகின்ற வெற்றிட எண்ணிக்கையின் அடிப்படையில் என்பது பற்றி என்னால் தீர்மானிக்கப்படுகின்றது. அவ்வாறு தீர்மானிக்கப்படும் திகதியாகும் போது வருடாந்த இடமாற்றம் காரணமாக 1 ஆம் அட்டவணையில் குறிப்பிடப்பட்டுள்ள ஒருசில பிரதேச செயலகப் பிரிவுகளில் காணப்படுகின்ற வெற்றிடங்கள் முழுமைப்படுத்தப்பட்டிருப்பதற்கு வாய்ப்புக் காணப்படுவதால் இது குறித்து பரீட்சார்த்திகளின் அவதானத்துக்கு கொண்டு வரப்படுகின்றது. அவ்வாறான பிரதேச செயலகப் பிரிவுகளில் பரீட்சைக்குத் தோற்றும் பரீட்சார்த்திகள் பிரதேச செயலகப் பிரிவு மட்டத்தில் ஆட்சேர்ப்பு செய்யும் போது வேறு பிரதேச செயலகங்களில் நிலவுகின்ற வெற்றிடங்களுக்காக தகைமை பெற மாட்டார்கள் என்பதனையும் கவனத்திற் கொள்ளவும்.

14. வர்த்தமானி அறிவித்தலில் குறிப்பிடப்பட்டுள்ள தகைமையுடையவர்கள் மாத்திரம் விண்ணப்பித்துள்ளார்கள் என்ற பூர்வாங்க தீர்மானத்தின் படி, அறிவித்தலில் குறிப்பிடப்பட்டுள்ள வயதெல்லைக்குட்பட்ட, விண்ணப்பங்கள் ஏற்றுக்கொள்ளப்படும் இறுதித் திகதிக்கு அல்லது அதற்கு முன்னர் உரிய பரீட்சைக் கட்டணம் செலுத்தப்பட்டு அதற்குரித்தான பற்றுச்சீட்டு, பரீட்சைக்குத் தோற்றும் மொழி மூலம், விண்ணப்பதாரியின் கையொப்பம் மற்றும் கையொப்பத்தை சான்றுப்படுத்தல் ஏற்புடையதாயின் மாத்திரம் திணைக்களத் தலைவரின் சான்றுரையுடன் திருத்தமாக பூர்த்தி செய்யப்பட்டுள்ள விண்ணப்பங்களை அனுப்பி வைத்துள்ள விண்ணப்பதாரிகளுக்கு பரீட்சை ஆணையாளர் நாயகத்தினால் பரீட்சைக்கான அனுமதி அட்டை அனுப்பி வைக்கப்படும். அடிப்படை தகைமைகள் இல்லையென நேர்முகப் பரீட்சையின் போது அல்லது பின்னரான சந்தர்ப்பத்தில் அல்லது தெரியவருமிடத்து பரீட்சையின் பெறுபேறு இப்பதவியைப் பெற்றுக்கொள்வதற்கான தகைமையாகக் கொள்ளப்பட மாட்டாது. பரீட்சைக்கான அனுமதி அட்டை அனுப்பப்பட்டவுடன் அது பற்றி குறிப்பிட்டு பத்திரிகை அறிவித்தலொன்று இலங்கை பரீட்சைத் திணைக்களத்தினால் பிரசுரிக்கப்படும். அறிவித்தலில் குறிப்பிடப்பட்டுள்ள பரீட்சை நடாத்தப்படும் திகதிக்கு குறைந்தபட்சம் ஐந்து (05) நாட்களுக்கு முன்னர் தமது

அனுமதி அட்டை கிடைக்கப்பெறாத விண்ணப்பதாரிகள் இருப்பின் அறிவித்தலில் குறிப்பிடப்பட்டுள்ளபடி அது குறித்து இலங்கை பரீட்சை திணைக்களத்தின் ஒழுங்கமைப்பு ( நிறுவன மற்றும் வெளிநாட்டுப் பரீட்சைக்) கிளையிடம் வினவுதல் வேண்டும். அவ்வாறு வினவும் போது விண்ணப்பதாரி தான் தோற்றும் பரீட்சையின் பெயர், விண்ணப்பதாரியின் முழுப் பெயர், தேசிய அடையாள அட்டை இலக்கம் மற்றும் முகவரியை நிவர்த்தியாக குறிப்பிடுதல் வேண்டும். கொழும்புக்கு வெளியே உள்ள விண்ணப்பதாரியாயின் அவ் விபரங்களுடன் பெக்ஸ் ஊடாக பரீட்சை பிரவேசப் பத்திர நிழற்படப் பிரதியொன்றை அனுப்புவதற்காக விண்ணப்பதாரியின் பெக்ஸ் இலக்கத்தைக் குறிப்பிட்டு கோரிக்கைக் கடிதத்தையும் அறிவித்தலில் குறிப்பிடப்பட்டுள்ள பெக்ஸ் இலக்கத்தின் ஊடாக பரீட்சை திணைக்களத்துக்கு அனுப்பி வினவுவது மிகவும் பயன்மிக்கதாகும். அவ்வாறு கோரும் போது பரீட்சைத் திணைக்களத்தினால் கேட்கப்படும் ஏதேனுமொரு தகவலை உறுதிப்படுத்துவதற்காக தன்வசம் உள்ள விண்ணப்பப்படிவத்தின் நிழற்படப் பிரதி, பரீட்சைக் கட்டணம் செலுத்திய பற்றுச்சீட்டின் நிழற் பிரதி மற்றும் விண்ணப்பப்படிவத்தை தபாலில் அனுப்பும் போது பதிவு செய்யப்பட்ட பற்றுச் சீட்டினையும் தயாராக வைத்திருப்பது பயன்மிக்கதாகும்.

15. இவ் அறிவித்தல் சிங்களம், தமிழ் மற்றும் ஆங்கிலம் ஆகிய மொழிகளில் பிரசுரிக்கப்படும். அறிவித்தலில் ஏதேனும் ஒரு மொழியில் முன்பின்னான முரண்பாடுகள் ஏற்பட்டால் அவ்வாறான சந்தர்ப்பங்களில் சிங்கள மொழியிலான அறிவித்தலே வலுவானதாகவிருக்கும்.

16. இவ்வறிவித்தலின் மூலம் வெளியிடப்படாத ஏதேனும் ஒருவிடயம் காணப்படின் அதுகுறித்து முடிவெடுக்கும் உரிமை உள்நாட்டலுவல்கள் இராஜாங்க அமைச்சின் செயலாளருக்கே உரித்துடையதாகும்.

என். எச். எம். சித்ரானந்த,
செயலாளர்,
உள்நாட்டலுவல்கள் இராஜாங்க அமைச்சு.

.

உள்நாட்டலுவல்கள் இராஜாங்க அமைச்சு,
"நில மெதுர", எல்விட்டிகல மாவத்தை,
கொழும்பு 05.
2021, மே 13.

இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின் இலக்கம் 2147/28 மற்றும் 2019.10.29 ஆந் திகதிய அதிவிசேட வர்த்தமானப் பத்திரிகையினூடாக நுவரஎலிய நிர்வாக மாவட்டத்தில் 10 புதிய பிரதேச செயலாளர் காரியாலயங்களும் காலி நிர்வாக மாவட்டத்தில் 05 புதிய பிரதேச செயலாளர் காரியாலயங்களும் இரத்தினபுரி நிர்வாக மாவட்டத்தில் 02 புதிய பிரதேச செயலாளர் காரியாலயங்களும் நிர்மாணிக்கப்பட்டள்ளன. ஆயினும் குறித்த புதிய பிரதேச செயலாளர் காரியாலயங்களில் நிர்வாக நடவடிக்கைகள் தொடர்ச்சியாக நிறுவப்பட்டு வருவதனால் குறித்த பரீட்சை தொடர்பாக விண்ணப்பிக்கும் போது குறித்த வர்த்தமானப் பத்திரிகை வெளிவருவதற்கு முன்னராக நடைமுறையிலிருந்த கீழே அட்டவணை I இல் குறிப்பிடப்பட்டுள்ள பிரதேச செயலாளர் காரியாலயங்களின் கீழ் விண்ணப்பித்தல் வேண்டும். (.இது நுவரஎலிய, இரத்தினபுரி மற்றும் காலி ஆகிய மாவட்டங்களுக்கு மாத்திரம் உரித்தாகும்.)

***அட்டவணை 1***

| *பிரதேச செயலகப் பிரிவு* | *பிரதேச செயலகப் பிரிவின் இலக்கம்* | *உரிய மாவட்டம் மற்றும் இலக்கம்* | *உரிய மாகாணம் மற்றும் இலக்கம்* |
|---|---|---|---|
| கொழும்பு | 1103 | 01 கொழும்பு | 01 மேல் மாகாணம் |
| கொலன்னாவை | 1106 | | |
| கடுவெல | 1109 | | |
| ஹோமாகம | 1112 | | |
| ஹங்வெல்ல | 1115 | | |
| பாதுகக்க | 1118 | | |
| மஹரகம | 1121 | | |
| ஸ்ரீ ஜயவர்தனபுர கோட்டை | 1124 | | |
| திம்பிரிகஸ்யாய | 1127 | | |
| தெஹிவலை | 1130 | | |
| இரத்மலானை | 1131 | | |
| மொரட்டுவை | 1133 | | |
| கஸ்பேவ | 1136 | | |
| | | | |
| நீர்கொழும்பு | 1203 | 02 கம்பஹா | |
| கடான | 1206 | | |
| திவுலபிட்டிய | 1209 | | |
| மீரிகம | 1212 | | |
| மினுவன்கொடை | 1215 | | |
| வத்தளை | 1218 | | |
| ஜா எல | 1221 | | |
| கம்பஹா | 1224 | | |
| அத்தனகல்ல | 1227 | | |
| தொம்பே | 1230 | | |
| மஹர | 1233 | | |
| களணி | 1236 | | |
| பியகம | 1239 | | |
| | | | |
| பாணந்துறை | 1303 | 03 களுத்துறை | |
| பண்டாரகம | 1306 | | |
| ஹொரணை | 1309 | | |
| இங்கிரிய | 1310 | | |
| புலத்சிங்கள | 1312 | | |
| மதுராவல | 1315 | | |
| மில்லனிய | 1318 | | |
| களுத்துறை | 1321 | | |
| பேருவளை | 1324 | | |

**அட்டவணை 1** *(தொடர்ச்சி)*

| *பிரதேச செயலகப் பிரிவு* | *பிரதேச செயலகப் பிரிவின் இலக்கம்* | *உரிய மாவட்டம் மற்றும் இலக்கம்* | *உரிய மாகாணம் மற்றும் இலக்கம்* |
|---|---|---|---|
| தொடங்கொட | 1327 | 03 களுத்துறை | 01 மேல் மாகாணம் |
| மதுகம | 1330 | | |
| அகலவத்தை | 1333 | | |
| பாலிந்தநுவர | 1336 | | |
| வலள்ளாவிட | 1339 | | |
| | | | |
| தும்பனே | 2103 | 04 கண்டி | 02 மத்திய மாகாணம் |
| பூஜாபிடிய | 2106 | | |
| அகுரணை | 2109 | | |
| பாததும்பர | 2112 | | |
| பன்வில | 2115 | | |
| உடுதும்பர | 2118 | | |
| மினிபே | 2121 | | |
| மெததும்பர | 2124 | | |
| குண்டசாலை | 2127 | | |
| ககவெட கோரளை | 2130 | | |
| ஹரிஸ்பத்துவ | 2133 | | |
| ஹதரலியத்த | 2134 | | |
| யடிநுவர | 2136 | | |
| உடுநுவர | 2139 | | |
| தொலுவ | 2142 | | |
| பாதஹெவாஹெட | 2145 | | |
| தெல்தொட்டை | 2148 | | |
| உடபலாத | 2151 | | |
| கங்க இஹல கோரளை | 2154 | | |
| பஸ்பாகே கோரளை | 2157 | | |
| | | | |
| கலேவெல | 2203 | 05 மாத்தளை | |
| தம்புள்ள | 2206 | | |
| நாஉல | 2209 | | |
| பல்லேபொல | 2212 | | |
| யடவத்த | 2215 | | |
| மாத்தளை | 2218 | | |
| அபன்கக கோரலை | 2221 | | |
| லக்கல பல்லேகம | 2224 | | |
| வில்கமுவ | 2227 | | |
| ரத்தொட | 2230 | | |
| உகுவெல | 2233 | | |

**அட்டவணை 1** *(தொடர்ச்சி)*

| *பிரதேச செயலகப் பிரிவு* | *பிரதேச செயலகப் பிரிவின் இலக்கம்* | *உரிய மாவட்டம் மற்றும் இலக்கம்* | *உரிய மாகாணம் மற்றும் இலக்கம்* |
|---|---|---|---|
| கொத்மலை | 2303 | 06 நுவரெலியா | 02 மத்திய மாகாணம் |
| ஹகுரன்கெத | 2306 | | |
| வலபனே | 2309 | | |
| நுவரெலியா | 2312 | | |
| அபகமுவ | 2315 | | |
| | | | |
| பென்தொடை | 3103 | 07 காலி | 03 தென் மாகாணம் |
| பலபிடிய | 3106 | | |
| கரன்தெணிய | 3109 | | |
| எல்பிடிய | 3112 | | |
| நியாகம | 3115 | | |
| தவலம | 3118 | | |
| நெலுவ | 3121 | | |
| நாகொடை | 3124 | | |
| பத்தேகம | 3127 | | |
| வெலிவிடிய திவிதுர | 3130 | | |
| அம்பலன்கொடை | 3133 | | |
| ஹிக்கடுவ | 3136 | | |
| கடவத்சதர | 3139 | | |
| போபே பொத்தல | 3142 | | |
| அக்மீமன | 3145 | | |
| யக்கலமுல்ல | 3148 | | |
| இமதுவ | 3151 | | |
| கோனபீனுவல | 3154 | | |
| ஹபராதுவ | 3157 | | |
| | | | |
| பிடபெத்தர | 3203 | 08 மாத்தறை | |
| கொடபொல | 3206 | | |
| பஸ்கொடை | 3209 | | |
| முலடியன | 3212 | | |
| அதுரலிய | 3215 | | |
| அகுரஸ்ஸ | 3218 | | |
| வெலிபிடிய | 3221 | | |
| மாலிம்பட | 3224 | | |
| கபுருபிடிய | 3227 | | |
| ஹக்மன | 3230 | | |
| கிரிந்த புஹுல்வெல்ல | 3233 | | |
| திஹகொட | 3236 | | |

**அட்டவணை 1** *(தொடர்ச்சி)*

| *பிரதேச செயலகப் பிரிவு* | *பிரதேச செயலகப் பிரிவின் இலக்கம்* | *உரிய மாவட்டம் மற்றும் இலக்கம்* | *உரிய மாகாணம் மற்றும் இலக்கம்* |
|---|---|---|---|
| வெலிகம | 3239 | 08 மாத்தறை | 03 தென் மாகாணம் |
| மாத்தறை | 3242 | | |
| தேவிநுவர | 3245 | | |
| திக்வெல்ல | 3248 | | |
| | | | |
| சூரியவெவ | 3303 | 09 அம்பாந்தோட்டை | |
| லுணுகம்வெஹெர | 3306 | | |
| திஸ்ஸமஹாராம | 3309 | | |
| அம்பாந்தோட்டை | 3312 | | |
| அம்பலன்தொடை | 3315 | | |
| அகுணகொல பெலஸ்ஸ | 3318 | | |
| வீரகெடிய | 3321 | | |
| கடுவன | 3324 | | |
| ஒகேவெல | 3327 | | |
| பெலிஅத்த | 3330 | | |
| தங்கல்ல | 3333 | | |
| வலஸ்முல்ல | 3336 | | |
| | | | |
| கைட்ஸ் | 4103 | 10 யாழ்ப்பாணம் | 04 வட மாகாணம் |
| சங்கானை | 4106 | | |
| சந்திலிபாய் | 4109 | | |
| தெலிப்பாய் | 4112 | | |
| உடுவில் | 4115 | | |
| கோபாய் | 4118 | | |
| கரவெட்டி | 4121 | | |
| மருதன்கேர்னி | 4124 | | |
| பருத்தித்துறை | 4127 | | |
| சாவகச்சேரி | 4130 | | |
| நல்லூர் | 4133 | | |
| யாழ்ப்பாணம் | 4136 | | |
| வேலனை | 4139 | | |
| டெல்ப் | 4142 | | |
| காரைநகர் | 4145 | | |
| | | | |
| மன்னார் | 4203 | 11 மன்னார் | |
| மாந்தை மேற்கு | 4206 | | |
| மடு | 4209 | | |
| நாநட்டான் | 4212 | | |
| முசலி | 4215 | | |

**அட்டவணை 1** *(தொடர்ச்சி)*

| *பிரதேச செயலகப் பிரிவு* | *பிரதேச செயலகப் பிரிவின் இலக்கம்* | *உரிய மாவட்டம் மற்றும் இலக்கம்* | *உரிய மாகாணம் மற்றும் இலக்கம்* |
|---|---|---|---|
| வவுனியா வடக்கு | 4303 | 12 வவுனியா | 04 வட மாகாணம் |
| வவுனியா தெற்கு | 4306 | | |
| வவுனியா | 4309 | | |
| வென்கலசேடிக்குளம் | 4312 | | |
| | | | |
| துனுக்காய் | 4403 | 13 முல்லைத்தீவு | |
| மாந்தை கிழக்கு | 4406 | | |
| புதுக்குடியிருப்பு | 4409 | | |
| ஒட்டுச்சுட்டான் | 4412 | | |
| மரிடைம்பத்து | 4415 | | |
| வெலிஓய | 4418 | | |
| | | | |
| பச்சிலைப்பள்ளி | 4503 | 14 கிளிநொச்சி | |
| கண்டாவளை | 4506 | | |
| கரச்சி | 4509 | | |
| பூநகரி | 4512 | | |
| | | | |
| கோரலைப்பற்று வடக்கு | 5103 | 15 மட்டக்களப்பு | 05 கிழக்கு மாகாணம் |
| கோரலைப்பற்று மேற்கு | 5106 | | |
| கோரலைப்பற்று | 5109 | | |
| ஏறாவூர்பற்று | 5112 | | |
| ஏறாவூர் நகரம் | 5115 | | |
| மண்முனை வடக்கு | 5118 | | |
| மண்முனை மேற்கு | 5121 | | |
| காத்தான்குடி | 5124 | | |
| மண்முனைப்பற்று | 5127 | | |
| மண்முனை தென்மேற்கு | 5130 | | |
| போர்த்தீவுப்பற்று | 5133 | | |
| மண்முனை தெற்கு | 5136 | | |
| கோரலைப்பற்று தெற்கு | 5139 | | |
| கோரலைப்பற்று மத்திய | 5142 | | |
| | | | |
| தெஹிஅத்த கண்டிய | 5203 | 16 அம்பாறை | |
| பதியதலாவ | 5206 | | |
| மஹஓய | 5209 | | |
| உஹன | 5212 | | |
| அம்பாறை | 5215 | | |
| நாவிதன்வெலி | 5216 | | |

**அட்டவணை 1** *(தொடர்ச்சி)*

| *பிரதேச செயலகப் பிரிவு* | *பிரதேச செயலகப் பிரிவின் இலக்கம்* | *உரிய மாவட்டம் மற்றும் இலக்கம்* | *உரிய மாகாணம் மற்றும் இலக்கம்* |
|---|---|---|---|
| சம்மாந்துரை | 5218 | 16 அம்பாறை | 05 கிழக்கு மாகாணம் |
| கல்முனை - தமிழ் | 5224 | | |
| சாய்ந்தமருது | 5225 | | |
| காரைதீவு | 5227 | | |
| நிந்தவூர் | 5230 | | |
| அட்டாளச்சேனை | 5233 | | |
| இரக்காமம் | 5234 | | |
| அக்கரைப்பற்று | 5236 | | |
| ஆலயடிவேம்பு | 5239 | | |
| தமன | 5242 | | |
| திருக்கோவில் | 5245 | | |
| பொத்துவில் | 5248 | | |
| லாஹுகல | 5251 | | |
| கல்முனை - முஸ்லிம் | 5254 | | |
| | | | |
| பதவி ஸ்ரீ புர | 5303 | 17 திருகோணமலை | |
| குச்சவேலி | 5306 | | |
| கோமரன்கடவல | 5309 | | |
| மொரவெவ | 5312 | | |
| நகரம் மற்றும் கடவத்சதர | 5315 | | |
| தம்பலகாமம் | 5318 | | |
| கந்தளாய் | 5321 | | |
| கிண்ணியா | 5324 | | |
| மூதூர் | 5327 | | |
| சேருவில | 5330 | | |
| வெருகல் /இச்சலம்பத்து | 5333 | | |
| | | | |
| கிரிபாவ | 6103 | 18 குருநாகல் | 06 வடமேல் மாகாணம் |
| கல்கமுவ | 6106 | | |
| எஹடுவெவ | 6109 | | |
| அபன்பொல | 6112 | | |
| கொடவெஹெர | 6115 | | |
| ரஸ்நாயகபுர | 6118 | | |
| நிகவெரடிய | 6121 | | |
| மஹவ | 6124 | | |
| பொல்பிதிகம | 6127 | | |
| இப்பாகமுவ | 6130 | | |
| கனேவத்த | 6133 | | |

**அட்டவணை 1** *(தொடர்ச்சி)*

| *பிரதேச செயலகப் பிரிவு* | *பிரதேச செயலகப் பிரிவின் இலக்கம்* | *உரிய மாவட்டம் மற்றும் இலக்கம்* | *உரிய மாகாணம் மற்றும் இலக்கம்* |
|---|---|---|---|
| வாரியபொல | 6136 | 18 குருநாகல் | 06 வடமேல் மாகாணம் |
| கொபேகனே | 6139 | | |
| பிங்கிரிய | 6142 | | |
| பமுணாகொடுவ | 6149 | | |
| மாஸ்பொத | 6151 | | |
| குருநாகல் | 6154 | | |
| மல்லவபிடிய | 6157 | | |
| மாவதகம | 6160 | | |
| ரிதீகம | 6163 | | |
| வீரபுகெதர | 6166 | | |
| குளியாபிட்டிய - கிழக்கு | 6169 | | |
| குளியாபிடிய - மேற்கு | 6172 | | |
| உடுபந்தாவ | 6175 | | |
| பன்னல | 6178 | | |
| நாரம்மல | 6181 | | |
| அலவ்வ | 6184 | | |
| பொல்கஹவெல | 6187 | | |
| பண்டுவஸ்நுவர கிழக்கு | 6190 | | |
| பண்டுவஸ்நுவர மேற்கு | 6193 | | |
| | | | |
| கற்பிட்டி | 6203 | 19 புத்தளம் | |
| வனாத்தவில்லு | 6206 | | |
| கருவெலகஸ்வெவ | 6209 | | |
| நவகத்தேகம | 6212 | | |
| புத்தளம் | 6215 | | |
| முந்தளம் | 6218 | | |
| மஹகுபுக்கடவல | 6221 | | |
| ஆணமடுவ | 6224 | | |
| பள்ளம | 6227 | | |
| ஆரச்சிகட்டுவ | 6230 | | |
| சிலாபம் | 6233 | | |
| மாதம்பே | 6236 | | |
| மஹவெவ | 6239 | | |
| நாத்தான்டி | 6242 | | |
| வென்னப்புவ | 6245 | | |
| தங்கொட்டுவ | 6248 | | |
| | | | |

**அட்டவணை 1** *(தொடர்ச்சி)*

| *பிரதேச செயலகப் பிரிவு* | *பிரதேச செயலகப் பிரிவின் இலக்கம்* | *உரிய மாவட்டம் மற்றும் இலக்கம்* | *உரிய மாகாணம் மற்றும் இலக்கம்* |
|---|---|---|---|
| பதவிய | 7103 | 20 அநுராதபுரம் | 07 வடமத்திய மாகாணம் |
| கெபிதிகொல்லாவ | 7106 | | |
| மெதவச்சி | 7109 | | |
| மஹவிலச்சிய | 7112 | | |
| நுவரகம்பலாத மத்திய | 7115 | | |
| ரபேவ | 7118 | | |
| கஹடகஸ்திகிலிய | 7121 | | |
| ஹொரோபதான | 7124 | | |
| கலென்பிதுனுவெவ | 7127 | | |
| மிஹிந்தலை | 7130 | | |
| நுவரகம்பலாத கிழக்கு | 7133 | | |
| நாச்சியாதீவு | 7136 | | |
| நொச்சியாகம | 7139 | | |
| இராஜாங்கனை | 7142 | | |
| தபுத்தேகம | 7145 | | |
| தலாவ | 7148 | | |
| திரப்பனே | 7151 | | |
| கெகிராவ | 7154 | | |
| பளுகஸ்வெவ | 7157 | | |
| இபலோகம | 7160 | | |
| கல்நேவ | 7163 | | |
| பலாகல | 7166 | | |
| | | | |
| ஹிகுரக்கொடை | 7203 | 21 பொலநறுவை | |
| மெதிரிகிரிய | 7206 | | |
| லங்காபுர | 7209 | | |
| வெலிகந்த | 7210 | | |
| திம்புலாகலை | 7212 | | |
| தமன்கடுவை | 7215 | | |
| எலஹர | 7218 | | |
| | | | |
| மஹியங்கனை | 8103 | 22 பதுளை | 08 ஊவா மாகாணம் |
| ரிதீமாலியந்த | 8106 | | |
| மீகஹகிவுர | 8109 | | |
| கன்தேகெடிய | 8112 | | |
| சொரணாதொட | 8115 | | |
| பஸ்ஸர | 8118 | | |
| லுணுகல | 8119 | | |

**அட்டவணை 1** *(தொடர்ச்சி)*

| *பிரதேச செயலகப் பிரிவு* | *பிரதேச செயலகப் பிரிவின் இலக்கம்* | *உரிய மாவட்டம் மற்றும் இலக்கம்* | *உரிய மாகாணம் மற்றும் இலக்கம்* |
|---|---|---|---|
| பதுள்ளை | 8121 | 22 பதுளை | 08 ஊவா மாகாணம் |
| ஹாலிஎல | 8124 | | |
| ஊவா பரணகம | 8127 | | |
| வெலிமட | 8130 | | |
| பண்டாரவெல | 8133 | | |
| எல்ல | 8136 | | |
| ஹபுதலே | 8139 | | |
| ஹல்தும்பல | 8203 | | |
| | | | |
| மடுல்ல | 8206 | 23 மொனராகலை | |
| மெதகம | 8209 | | |
| சியபலாண்டுவ | 8212 | | |
| மொணராகலை | 8215 | | |
| படல்குபுர | 8218 | | |
| புத்தல | 8221 | | |
| வெல்லவாய | 8224 | | |
| கதிர்காமம் | 8227 | | |
| தணமல்வில | 8230 | | |
| செவணகல | 8233 | | |
| | | | |
| எஹலியகொடை | 9103 | 24 இரத்தினபுரி | 09 சப்பிரகமுவ மாகாணம் |
| குருவிட்ட | 9106 | | |
| கிரிஎல்ல | 9109 | | |
| இரத்தினபுரி | 9112 | | |
| இபுல்பே | 9115 | | |
| பலாங்கொடை | 9118 | | |
| ஓபநாயக | 9121 | | |
| பெல்மடுல்ல | 9124 | | |
| எலகாத | 9127 | | |
| அயகம | 9130 | | |
| கலவான | 9133 | | |
| நிவிதிகல | 9136 | | |
| கஹவத்த | 9139 | | |
| கொடகவெல | 9142 | | |
| வெலிகெபொல | 9145 | | |
| எம்பிலிப்பிடிய | 9148 | | |
| கொலோன்த | 9151 | | |
| | | | |

**அட்டவணை 1** *(தொடர்ச்சி)*

| பிரதேச செயலகப் பிரிவு | பிரதேச செயலகப் பிரிவின் இலக்கம் | உரிய மாவட்டம் மற்றும் இலக்கம் | உரிய மாகாணம் மற்றும் இலக்கம் |
|---|---|---|---|
| ரபுக்கன | 9203 | 25 கேகாலை | 09 சப்பிரகமுவ மாகாணம் |
| மாவனல்லை | 9206 | | |
| அரணாயக | 9209 | | |
| கேகாலை | 9212 | | |
| கலிகமுவ | 9215 | | |
| வரகாபொல | 9218 | | |
| ருவன்வெல்ல | 9221 | | |
| புலத்கொஹுபிடிய | 9224 | | |
| யடியந்தொட்டை | 9227 | | |
| தெஹிஓவிட | 9230 | | |
| தெரணியகல | 9233 | | |

5-471

---

## தொழில் அமைச்சு

### தொழில் திணைக்களத்தில் சுருக்கெழுத்தாளர் (தரம் III) பதவிக்கானஆட்சேர்ப்புக்குரிய திறந்த போட்டிப்பரீட்சை -2021

தொழில் அமைச்சின் கீழுள்ள தொழில் திணைக்களத்தில் 2021.03.31 இல் சுருக்கெழுத்தாளர் (தரம் III) பதவிக்கு உள்ள சிங்கள மொழிமூல வெற்றிடங்கள் ஐந்திற்கும் (05), ஆங்கில மொழிமூல வெற்றிடங்கள் நான்கிற்கும் (04) தகுதியுடைய இலங்கைப் பிரசைகளிடமிருந்து விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன.

**01. நியமனம்**

தொழில் அமைச்சின் கீழுள்ள தேசிய தொழிற் கற்கைகள் நிறுவகத்தால் நடாத்தப்படும் எழுத்து மற்றும் தொழில்வாண்மைப் பரீட்சைகளின் பெறுபேறுகளின் தகுதி அடிப்படையில், வெற்றிடங்களுக்கான நியமனங்கள் வழங்கப்படும்.

**02. தகைமைகள்**

2.1 கல்வித் தகைமைகள்

I. க.பொ.த. (சா.த.) பத்திரப் பரீட்சையில் ஒரே தடவையில், சிங்களம் / தமிழ் /ஆங்கிலம், கணிதம் ஆகிய பாடங்களிலும் மேலும் இருபாடங்களிலும் திறமைச் சித்திகளுடன், ஆறு (06) பாடங்களில் சித்தியடைந்திருத்தல்.

மற்றும்,

II. க.பொ.த. (உ.த.) பத்திரப் புதிய பாடத் திட்டத்தின் கீழ் பரீட்சையில் (பொது அறிவு மற்றும் பொதுவான ஆங்கிலப் பாடங்கள் தவிர்ந்த) ஏதேனும் ஒரு பாடத்தில் சித்தியடைந்திருத்தல்.

2.2 தொழிற் தகைமைகள்

2.2.1 சிங்கள சுருக்கெழுத்தாளர் பதவிக்கு விண்ணப்பிக்கும் விண்ணப்பதாரர், மூன்றாம் நிலைக்கல்வி மற்றும் தொழிற்கல்வி ஆணைக்குழுவால் அங்கீகரிக்கப்பட்ட நிறுவனமொன்றில் சிங்கள மொழியிலான ஆறு மாதங்களுக்குக் குறையாத காலத்திற்குரிய சுருக்கெழுத்துப் பயிற்சிநெறியைப் பூர்த்தி செய்திருத்தல் அல்லது, க.பொ.த. (சா.த.) பத்திரப் பரீட்சையில் சுருக்கெழுத்து மற்றும் தட்டச்சு (சிங்கள மொழி மூலம்) பாடத்தில் திறமைச் சித்தி பெற்றிருத்தல்.